**செய்தி வெளியீட்டு எண்.997** **நாள்: 21.12.2009**

## <u>உள் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அருந்ததியர் சமுதாயப் பெண்ணுக்கு உதவிப் பேராசிரியர் பணி !</u>
## <u>முதலமைச்சர் கலைஞரின் சமூகநீதிக் கொள்கையை முன்னின்று நிறைவேற்றும்</u>
## <u>துணை முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின்</u>

சாதி ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டு தமிழகமே ஒரு சமத்துவபுரமாகவேண்டும் என்ற இலட்சியத்துடன் செயல்பட்டு வருகிறது முதல்வர் கலைஞர் தலைமையிலான தி.மு.கழக அரசு. திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சுக் கொள்கையான சமூக நீதியை நிலைநாட்டுவதில் கலைஞரின் அரசு உறுதியுடன் பணியாற்றி வருவதன் காரணமாகத்தான் மிகப்பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் சீர் மரபினருக்குமான 20 சதவீத இடஒதுக்கீடு, பழங்குடி மக்களுக்கான 1 சதவீத இடஒதுக்கீடு ஆகியவை தமிழகத்தில் நடைமுறையில் உள்ளன. மத்திய அரசின் கல்வி–வேலை வாய்ப்புகளில் மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு கிடைக்கச் செய்ததில் முதல்வர் கலைஞரின் பங்கு மகத்தானது என்பதை இந்தியத் திருநாடு அறியும்.

2006ல் ஐந்தாம் முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் சமூகநீதி வரலாற்றின் மைல்கல்லாக இஸ்லாமிய சிறுபான்மையினருக்கு 3.5 சதவீத தனி இடஒதுக்கீட்டையும், அருந்ததியர் சமுதாயத்தினருக்கான 3 சதவீத உள் இடஒதுக்கீட்டையும் நடைமுறைப்படுத்தியுள்ளார். இந்த இடஒதுக்கீட்டு அளவுகளின்படி அந்தந்த சமுதாயத்தினருக்கு கல்வி–வேலைவாய்ப்புகளில் இடமளிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது கலைஞர் தலைமையிலான கழக அரசு. இதனை நடைமுறைப்படுத்துவதில் துணை முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தொடர்பியல் துறையில் உதவிப் பேராசிரியர் பணிக்கான நேர்காணல் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. அருந்ததியர் சமுதாயத்தினருக்கான இந்தப் பணியிடத்திற்கு, நீலகிரி மாவட்டம் குன்னூரில் தெருவோர பழக்கடை நடத்தும் இந்துஅருந்ததிய சமுதாயத்தவர்களான பத்துரன்–துளசி தம்பதியின் மகள் இராதா விண்ணப்பித்திருந்தார். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இராதா, தமிழக அரசின் ஆதிதிராவிடர் நல மாணவர் உதவித்தொகை மற்றும் வருவாய்த்துறையின் உதவித்தொகை மூலம் பள்ளிப்படிப்பினை நிறைவுசெய்து, தொலைத்தொடர்புக்கல்வியில் தொடர்பியல் மற்றும் ஊடகவியல் முதுகலைப்பட்டம் (M.A Journalism and Mass Communication) பெற்றவர். பல்கலைக்கழக மானியக்குழுவின் தேசியத் தகுதித் தேர்விலும் வெற்றி பெற்றவர்.

தனது விண்ணப்பதையும் கல்வித் தகுதியையும் குடும்பப் பின்னணியையும் துணை முதல்வர் அவர்களின் www.mkstalin.net இணையதளத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்த இராதா, பணி நியமனம் தொடர்பாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் வெளியிட்டிருந்த அறிவிப்பில், தகுதி வாய்ந்த அருந்ததியினர் இல்லை

என்றால் பிற ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதையும் துணை முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். பல்கலைக்கழகம் முதல்முறை நடத்திய நேர்காணலில் அருந்ததிய சமுதாயத்தினர் யாரும் பங்கேற்கவில்லை என்பதால் இரண்டாவது முறையாக நேர்காணல் நடத்தப்படவிருக்கிறது என்றும், இந்த நேர்காணலுக்கு விண்ணப்பித்திருக்கின்ற அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒரே விண்ணப்பதாரர் தான்தான் என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியில் கொண்டுவரப்பட்ட அருந்ததியர் உள்இடஒதுக்கீட்டின் அடிப்படையில் , உரிய கல்வித்தகுதியுடைய தனக்கு இந்தப் பணி கிடைக்க ஆவன செய்யுமாறு கோரியிருந்தார்.

இராதாவின் கோரிக்கை மனுவில் உள்ள விவரங்களை சரிபார்த்த துணை முதல்வர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர்அவர்கள் கெண்டு வந்த உள் இடஒதுக்கீடு உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாலும் அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் பல போராட்டங்களைத் தாண்டி, உயர் கல்வி கற்ற முதல் தலைமுறைப் பெண் என்ற அடிப்படையிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினரிடமும், உயர் கல்வித் துறை அதிகாரிகளிடமும், அருந்ததியர் சமுதாயத்திற்கான உள்இடஒதுக்கீட்டுக்குட்பட்ட பணியிடங்களை வேறு வகையில் நிரப்பக்கூடாது என உத்தரவிட்டதுடன், தகுதி வாய்ந்த அருந்ததியினர் இன விண்ணப்பதாரரையே நியமிக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்தார். இதனடிப்படையில் நடந்த நேர்காணலில், இராதா அவர்கள் தேர்வு பெற்று, உதவிப்பேராசிரியர் பணி நியமன ஆணையைப் பெற்றுள்ளார்.

துணை முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால், அருந்ததியர் சமுதாயத்திற்கான உள்இடஒதுக்கீடு உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே. டாக்டர் வி.யோகானந்தன் (Marine Science and Technology), விஜயகுமார் (Information Technology), பாலகுமார் (Computer Science and Engineering) உள்ளிட்ட மற்ற துறைகளிலும், துணை முதல்வர் அவர்களின் பரிந்துரைப்படி அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த 5 பேருக்கு உள்இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சமூக நீதிக் கொள்கை முழுமையாக வெற்றி பெற அயராது உழைக்கும் முதல்வர் கலைஞரின் சீரிய திட்டங்களை முன்னின்று நிறைவேற்றி வருகிறார் துணை முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.